திருத்திவிட்டு மொத்தமாகக் கொண்டுவர வேண்டும் என்ற யோசனை செய்துதான் செய்திருக்கிறோம். அவசரப்பட்டுக் கொண்டுவந்துவிடவில்லை. நீண்ட நாட்களாகப் பரிசீலிக்கப்பட்ட ஒன்று. மீண்டும் இந்த சபைக்கு வரும்போது அங்கத்தினர்கள் கருத்தைத் தெரிவிக்கலாம்.

DEPUTY CHAIRMAN : The question is—

"That the Resolution carried in the Tamil Nadu Legislative Council on the 30th November 1970, in pursuance of section 305-A of the Tamil Nadu District Municipalities Act, 1920, approving the Tamil Nadu Municipal Service Rules, 1970, the Tamil Nadu Municipal Services (Discipline and Appeal) Rules, 1970, and the Tamil Nadu Municipal Services Pension Rules, 1970, be rescinded and that this House do permit the Hon. the Minister for Food and Local Administration to withdraw the resolution."

The Resolution was put and carried and the original Resolution was rescinded.

VI. GOVERNMENT MOTION

Motion under Rule 21(3) of the Council Rules Re change in the Order of Bussiness

THE HON. THIRU S. MADHAVAN : Mr. Deputy Chairman, I move—

"That under rule 21 (3) of the Tamil Nadu Legislative Council Rules, items Nos. 4 and 5 under Government Bills on the Agenda, *i.e.*, The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1970 and the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1970, be taken up before item (1)."

DEPUTY CHAIRMAN : The question is—

"That under rule 21 (3) of the Tamil Nadu Legislative Council Rules, items Nos. (4) and (5) under Government Bills on the Agenda, *i.e.*, The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1970 and the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1970, be taken up before item (1)."

The motion was put and carried.

VII. GOVERNMENT BILLS

The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 45 of 1970)

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) மசோதாவை† (தமிழ் நாடு மசோதா எண் 45/1970),

---

† Printed as Appendix III

தமிழக சட்ட மன்றத்தில் நிறைவேறியவாறு, இவ்வவை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் முன் மொழிகிறேன்.

இந்து சமுதாயத்தில் பாரம்பரிய அர்ச்சகர் பதவி ஒழிக்கப்பட வேண்டுமென்றும், உரிய கல்வித் தகுதியை உடையவர்கள் ஏற்புடைய நிறுவனங்களில் அர்ச்சகர் தொழிலில் பயிற்சி பெற்றவர்கள் அடங்கிய சமய அமைப்பு ஒன்று இந்தப் பாரம்பரிய அர்ச்சகர் தொழில் முறைக்குப் பதிலாக ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும், சாதி, சமய அல்லது வகுப்பு வேறுபாடின்றி எல்லோருக்கும் இந்தத் துறையில் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்றும், தீண்டாமை, அரிஜனங்களின் பொருளாதார கல்வி மேம்பாடு பற்றிய குழுவினர் தமது அறிக்கையில் 1969-ல் தமது கருத்தைத் தெரிவித்தனர். தமிழ் நாட்டில் அர்ச்சகர்கள், குருக்கள், பூசாரிகள் யாவரும் இந்து கோயில்களில் உள்துறை ஊழியர்களாவர். உள்துறை ஊழியர்களின் கடமைகள், முக்கியமாகத் தெய்வ வழிபாட்டுக்குரிய பூசைகள், சடங்குகள், வழிபாடுகள் நடத்துவது, மந்திரங்கள், வேதங்கள், பிரபந்தங்கள், தேவார பாராயணம் செய்தல், அத்தகைய பூசை பாராயணங்களில் சம்பந்தப்பட்ட இதைப் போன்ற தெய்வ வழிபாடுகள் தெய்வ நற்பணிகள் புரிவது பற்றியதாகும். தீண்டாமையை அறவே ஒழித்து சமுதாயச் சீர்திருத்தம் செய்வதற்காக, சாதி வேறுபாடின்றி எல்லா இந்துக்களுக்கும் இந்து ஆலயங்கள் ஏற்கெனவே திறந்துவிடப்பட்டன. மேலும் காஜுல தசரத ராம ராவுக்கும் ஆந்திரப் பிரதேச மாநிலத்திற்குமிடையே நடைபெற்ற வழக்கில் தலைமை நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளித்தது. ''கிராம அதிகாரிகள் நியமன விஷயத்தில் பாரம்பரிய உரிமைக் கொள்கையை உள்ளடக்கிய தமிழ் நாடு 1895-ஆம் ஆண்டு பாரம்பரிய கிராமப் பதவிகள் சட்டத்தின் 6 (1) பிரிவு சந்ததி உரிமை என்ற ஒரே காரணத்தினல் ஒருதலைப் பட்சமாக அமைந்துள்ளது. எனவே இப்பிரிவு அரசியலமைப்புச் சட்டத்தின் 16 (2) பிரிவுக்கு முரணனதும் செல்திறனற்றதும் ஆகும்.'' இத் தீர்ப்பையொட்டி மேற்சொன்ன பாரம்பரிய கிராமப் பதவிகள் சட்டத்தை முன்னரே நாம் ரத்து செய்து விட்டோம்.

இதையொட்டி மேற்சொன்ன குழுவினரின் பரிந்துரைகளுக்கு இணங்கவும், மேலே குறிப்பிட்டுள்ள தலைமை நீதிமன்றத் தீர்ப்பையொட்டியும், சமூகச் சீர்திருத்தத்தில் மேலும் எடுக்கப்படுகிற ஒரு நடவடிக்கையாகவும் இந்து கோயில்களில் எல்லாப் பதவிகளின் நியமனத்திலும் பாரம்பரியக் கொள்கையை நீக்குவதென்று அரசு முடிவெடுத்தது.

மேற்சொன்ன முடிவுக்கு செல்திறன் அளிக்கும் பொருட்டு 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் 55, 56-வது பிரிவுகளில் திருத்தம் தேவைப்படுகிறது. மேற்சொன்ன நோக்கத்தை எய்துவதே தமிழ் நாடு 1970-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) (சட்ட மன்றப் பேரவை மசோதா எண் 45/1970) மசோதாவின் நோக்கமாகும். இதன் தொடர்பாக அவசியமான திருத்தங்களையும் இம்மசோதா செய்கிறது.

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட இத் தீர்மானத்தை இம் மன்றம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

DEPUTY CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 45 of 1970), as passed by the Assembly, be taken into consideration."

*தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர்—குன்றக்குடி அடிகளார் : தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் தேவைப்படுகிறது. நோக்கத்தை நமக்குச் சொன்னபோது 'சாதி சமய வேறுபாடு இன்றி' என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது இந்து சமயத்துக்கு மட்டும் உரிய சட்டமாதலால், இந்த 'சமயம்' என்ற சொல்லையும் எடுத்துவிடட்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, இந்த மசோதாவைக் கொண்டு வருவதற்குக் காரணமாக ஒரு அறிக்கையிலே அப்படி சொல்லியிருக்கின்றார்கள். அதை 'காஸ்ட், கிரீட், ரேஸ்' என்று ''Phrase'' ஆகப் போட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கையை 'ஸ்டேட்மெண்ட் ஆஃப் ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ்' என்று சொல்லியிருக்கிறோம். நிச்சயம் மதத்துக்கு அப்பாற்பட்ட ஒருவரைக் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கம் சட்டத்திலே இல்லை. அப்படியிருந்தாலும் செல்லாது. மூலச் சட்டத்திலே 10வது பிரிவிலும், விதியிலே 3 இலும் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களைத் தவிர, வேறு யாரும் எந்த வேலையிலும் இருக்கக் கூடாது என்று தெளிவாக இருக்கின்ற காரணத்தாலே, இந்த மசோதாவின் நோக்கம் அது அல்ல.

*திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, நமது அரசு மேற்கொண்டிருக்கும் சீர்திருத்தச் சட்டங்களுள் இதுவும் ஒன்று. பல
4-40 p.m. வருடங்களாக இருந்துவரும் பரம்பரைப் பழக்கத்தை மாற்றி, இந்தக் கோயில்களில் அர்ச்சனை செய்பவர்களிடையே கூட பரம்பரை பாத்தியதையை எடுத்துவிட வேண்டும் என்ற நோக்கத்தில் இந்தத் திருத்த மசோதா இன்று நம் முன்னிலையில் வைக்கப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில், இம்மாதிரிச் சீர்திருத்தங்கள் எல்லாம் வேண்டியதுதான். ஆனால் நாம் செய்யும் காரியங்களைச் செவ்வனே செய்ய வேண்டும். அரைகுறையாகச் செய்து, நாம் மாட்டிக் கொள்ளக் கூடாது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். ஏனெனில் ''ஹிண்டு ரெலிஜியஸ் சாரிட்டபிள் எண்டௌமெண்ட்ஸ் ஆக்ட்'' என்று இருக்கிறது.

இதற்கு என்று ஒரு போர்டு. இந்து ரிலிஜியஸ் எண்டௌமெண்ட் போர்டு என்று ஒன்று இருக்கிறது. அந்த போர்டிலே அங்கத்தினர்கள் கிடையாது. அந்த போர்டுக்கு ஒரே ஒரு கமிஷனர்தான் உண்டு.

அதை அவர்தான் நிர்வகித்து வருகிறார். ஆயிரக்கணக்கான வருடங்களாக நமது முன்னோர்கள், மன்னர்கள் தங்கள் சொந்தச் சொத்துக்களிலிருந்து ஏராளமாக அறக்கட்டளைகளுக்கு ஏற்பாடு செய்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் இன்ன இன்ன விதமாக அந்த அறக்கட்டளைகள் நிர்வகிக்கப்பட வேண்டுமென்று சாசனம் செய்து விட்டுச் சென்றிருக்கிறார்கள். அந்த சாசனங்களில் கண்டபடி, அரசு நிர்வகித்து வருகிறது. அவற்றை மாற்றுவதற்கு இப்போதுள்ள சட்டப்படி, கான்ஸ்டிடியூஷன்படி எந்த விதமான அதிகாரமும் கிடையாது. அரசோ சமயச் சார்பற்ற அரசு. எந்த விதமான மதமும் அரசுக்குக் கிடையாது. எல்லா மதங்களுக்கும் பொதுவான ஒரு அரசாங்கம். ஆகையினாலே ஒரு மதத்தில் திடீரென்று பரம்பரை பரம்பரையாக இருந்து வரக்கூடிய வழக்கத்தை மாற்ற முற்பட்டால், அது சரியல்ல. முஸ்லீம் மதத்தில் பள்ளிவாசல்களில் இப்படித்தான் வழிபாடுகள் நடைபெற வேண்டும், அவர்கள் தொழுகை நடத்த வேண்டுமென்று நாம் ஒரு மசோதா கொண்டுவர முடியுமா ? கொண்டு வருவதற்கு நமக்குத் தைரியமும், தெம்பும் ஏற்படுமா ? ஆனால் அம்மாதிரிச் செய்ய முடியாத அரசாங்கம் இந்து மதம் சம்பந்தமாக மட்டும் இப்படிப்பட்ட மசோதாவைக் கொண்டு வந்து விட்டது. இப்படி அரசாங்கம் இவ்வளவு பெரிய பொறுப்பை மேற்கொண்டு ஏன் இப்படி ஒரு நடவடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டும் ? அரசாங்கம் எந்த மதச் சார்புமற்றது, சமயச் சார்பற்றது என்று சொல்லிக்கொள்கிறோம். அப்படியிருக்கும்போது, இவ்வளவு பெரிய பொறுப்பை ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும் ? இந்து ரிலிஜியஸ் எண்டௌமெண்ட் போர்டே இதை ஏற்றுச் செய்தால் என்ன ? இந்து மதத் தலைவர்கள், குன்றக்குடி அடிகளார் போன்றவர்களைக் கொண்டு ஒரு போர்டு அமைத்து, அந்த போர்டு கூறுகிற யோசனைகளை அரசாங்கம் ஏற்று அமுல் செய்யலாமே. அவர்கள் சொல்லுகிற சீர்திருத்தங்களை நிறைவேற்றலாமே. அந்த போர்டு பரம்பரை பாத்யதை இப்படி இப்படி இருக்க வேண்டும், கோவில்களில் இன்னின்ன முறையிலே பூஜை நடைபெற வேண்டும் என்று சொல்லுகிற கருத்துக்களை ஏற்றுச் செயல்படுத்தலாம். இந்து மதத்தைச் சேர்ந்த அடிகளாரைப் போன்ற 10, 15 பேரைக் கொண்டு ஒரு போர்டு அமைத்து, அவர்கள் கொடுக்கின்ற சிபாரிசுகளைக் கமிஷனர் ஏற்று நடத்தலாம். அப்படிச் செய்தால், அரசுக்கு பொறுப்பு குறையும். எனவே இந்தக் காரியத்தில் தலையிடாமல், அரசாங்கம் இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா</u> : தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர், ''ஏன் இவ்வளவு அவசரமாக இந்த மசோதாவைக் கொண்டு வருகிறீர்கள்? அரசாங்கம் எதற்காக இப்படி ஒரு மசோதாவைக் கொண்டு வந்து மதத்தில் தலையிட வேண்டும் ? ''என்று கேட்டார்கள். ''இது பரம்பரையாக செய்யப்பட்டு வருகிற பழக்கம் ஆயிற்றே! இதில் தலையிடலாமா ?'' என்றெல்லாம் சொன்னார்கள். இந்த பரம்பரை பாத்யதை இருப்பது மக்களுக்குள்ளே ''டிஸ்டிங்ஷன்'', ''டிஸ்கிரிமிநேஷன்'' செய்கிறது

என்பதை உயர் நீதி மன்றம் சுட்டிக்காட்டிய காரணத்தினால், இந்த மசோதா கொண்டுவரப்படுகிறது. இந்தத் திருத்தங்கள் சமுதாயம் வளர்ந்து வருகிற இந்த நேரத்தில், நாம் எல்லாம் ஜனநாயக சோஷலிஸம் என்று பேசிக் கொண்டிருக்கிற நேரத்தில், மக்களுடைய வளர்ச்சியில் குறுக்கிடாது. அவர்களுடைய வளர்ச்சியை இன்னும் அதிகமாக்கக்கூடிய முறையில், அந்த எண்ணத்தின் அடிப்படையிலே, இந்த மசோதா கொண்டுவரப்படுகிறது. ''இந்த அறக்கட்டளைகளெல்லாம் குறிப்பிட்ட ஒரு நோக்கத்திற்காகச் செய்யப்பட்டனவே! அதில் தலையிடலாமா, அது பாதகம் ஆயிற்றே'' என்றெல்லாம் சொன்னார்கள். அப்படிப்பட்ட அறக்கட்டளைகளில் இந்த மசோதா கொஞ்சம்கூடத் தலையிடவில்லை. இதை நான் அழுத்தமாகச் சொல்லிக்கொள்கிறேன். இந்து ரிலிஜியஸ் எண்டௌமெண்ட் சாசனத்தில் தலையிடும் நோக்கம் சிறிதுகூடக் கிடையாது. இங்கே நாம் ஆட்களைத்தான் மாற்றுகிறோம். யார் இன்றைக்கு அர்ச்சகர்கள்? ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அர்ச்சகர்களாக இருக்கிறார்கள். யார் வேண்டுமானாலும் அர்ச்சகர்களாக வரலாம் என்ற முறையிலே ஒரு மாற்றத்தைச் செய்வதுதான் இந்த மசோதாவின் நோக்கமே தவிர, மற்றப்படி கோவில்களில் நடைபெற்றுக்கொண்டு வருகிற நடைமுறைகளை, கோட்பாடுகளை, சம்பிரதாயங்களைக் கொஞ்சம்கூட மாற்ற வேண்டுமென்ற எண்ணம் கிடையாது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆசையினாலே இந்த மாற்றங்களைச் செய்வதினாலேயே அந்த அறக்கட்டளைகளில் தலையீடு என்பது கிடையாது. பரம்பரை தர்மகர்த்தா முறைகளிலே தலையீடு கிடையாது. ஏற்கெனவே உள்ள பழக்க வழக்கங்களில் மாறுபாடு கிடையாது. இந்து மதத்தின் 'எஸென்ஸ்' என்று சொல்லப்படுகிற அடிப்படையில் தலையிடும் நோக்கம் இந்த மசோதாவுக்குக் கிடையாது. இந்து மதத்தில் இருக்கிற குறுகிய நோக்கங்களை நீக்குவதற்காக இந்த மசோதா கொண்டுவரப்படுகிறது. அதே நேரத்தில் ஒரு போர்டு அமைத்து அதன் மூலம் மாற்றங்களைச் செய்யலாமே என்று சொன்னார்கள். முன்பு ஒரு போர்டு இருந்தது. இன்றைக்கும் அந்த போர்டு இருக்கிறது. அந்த போர்டு ஒரு அட்வைசரி போர்டாக இருக்கிறது. யோசனைகளைச் சொல்கிற அட்வைசரி போர்டாக இருந்து வருகிறது. அடுத்தபடியாக, நீண்ட காலமாக ஹரிஜனங்கள் நம்முடைய சமுதாயத்தில் மிகவும் கொடுமைக்குள்ளாக்கப்பட்டு வந்தார்கள். அதை இன்றைக்கு நாம் மாற்றியமைத்திருக்கிறோம். நீண்ட காலமாக இருந்து வந்த சதி வழக்கத்தை, கணவன் இறந்தால் மனைவியும் உடன்கட்டை ஏற வேண்டுமென்று இருந்து வந்த ஒரு பழக்கத்தை நாம் மாற்றியமைத்திருக்கிறோம். அதே போல தேவதாசி முறையை மாற்றியமைத்திருக்கிறோம். இப்படியாக மதத்தின் அடிப்படையில் இருந்து வந்த பழக்கங்களை நாம் இன்றைக்கு மாற்றியமைத்திருக்கிறோம். அதே போல விதவா திருமணம். விதவைகள் முன்பு மறுமணம் செய்து கொள்ளக்கூடாது என்று இருந்த வழக்கத்தை நாம் மாற்றியமைத்திருக்கிறோம். இரு தார மணத்தைத் தடை செய்து அந்தப் பழக்கத்தையும் மாற்றியமைத்திருக்கிறோம். இன்னும் கோவில்களில், ஆடு, கோழி பலியிடுதலையும் தடை செய்து அந்த வழக்கத்தையும் மாற்றியமைத்திருக்கிறோம். இப்படிப் பரம்பரைப் பழக்கமாக இருந்து வந்தவைகளை

2nd December 1970] [திரு. கே. வி. சுப்பையா]

மாற்றியமைத்திருக்கிறோம். கால மாறுபாடுகளுக்கு ஏற்ப நம் கருத்துக்களையும் நாம் மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கிறது. நாம் மாற்றங்களைச் செய்தால், அது மதத்தின் வளர்ச்சிக்கு உதவி செய்யுமே தவிர, மதத்திற்குக் குந்தகமாக அமைந்து விடாது, அல்லது மதத்தை அழிக்கிற தன்மையிலே இருக்காது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஆகையினாலே பரம்பரையாக அர்ச்சகர்களாக இருப்பவர்கள் "Those who profess the Hindu Religion" மட்டுமே அர்ச்சகர்களாக வர வேண்டும் என்கிற முறையை மாற்றி, அதற்கு என்று ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டியைப் போட்டு, அவர்கள் சொல்லுகிற கருத்துக்களை எடுத்துக் கொண்டு, அதன்படி எல்லா சாதிக்காரர்களையும் எடுத்துக் கொண்டு அவர்களுக்கு வேண்டிய பயிற்சியைக் கொடுத்து அவர்களும் அர்ச்சகர்களாக வருவதற்கு வழி செய்வதுதான் இந்த மசோதாவின் நோக்கம். நமது தவத்திரு அடிகளார் 'சாதி சமயம்' என்று இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு தொழில் அமைச்சர் குறிப்பிட்டது போல, 'காஸ்ட்', 'கிரீட்', 'ரேஸ்' என்ற வார்த்தைகள் ஒரு அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இளைய பெருமாள் கமிட்டியின் அறிக்கையிலே 'காஸ்ட்', 'கிரீட்', 'ரேஸ்' என்ற வார்த்தைகளைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 'காஸ்ட்', 'கிரீட்', பார்க்கக்கூடாது என்று அவர் பரிந்துரை செய்திருக்கிறார். அதைத்தான் எடுத்துப் போட்டிருக்கிறோம். நான் கீழ் சட்ட சபையிலே சொன்னேன் : இந்து மதத்திலே பலதரப்பட்ட ஜாதிகள் இருக்கின்றன. அப்படிப் பலதரப்பட்ட ஜாதிகளிலிருந்தும் அர்ச்சகர்கள் வர வேண்டும் என்பதுதான் இந்த மசோதாவின் நோக்கம். அடுத்தபடியாக, 'கிரீட்' என்றால் பலதரப்பட்ட இனங்கள், இந்தியாவிலே இந்து மதத்திலேயே பல இனங்கள், தமிழர்கள், ஆந்திரர்கள், மகாராஷ்டிரர்கள், குஜராத்திகள், ராஜஸ்தானியர்கள் இருக்கிறார்கள். அதே போல, 'ரேஸ்'' என்றால், இந்து மதத்தில் பலதரப்பட்ட மக்கள், திராவிடர்கள், ஆரியர்கள், மங்கோலியர்கள் இன்னும் மற்ற மற்ற வெளிநாட்டுக்காரர்கள் இந்து மதத்தில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், ''ஒன் ரேஸ்'' ஒரே மதக்காரர்கள் என்ற அடிப்படையில், வித்தியாசம் பாராட்டாமல், எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்திற்காக இந்த மசோதா கொண்டு வரப்படுகிறது. ஆகவே இந்த மசோதா நல்ல மசோதா. இந்து மதம் வளர்ந்து மேலும் மேலும் அது புகழ் அடைவதற்குத் துணை செய்கின்ற வகையிலே இந்த மசோதா கொண்டுவரப்படுகிறதே அன்றி, வேறு எந்த நோக்கத்திலும் அல்ல. இந்து மதத்தை நம்பிக்கொண்டிருக்கிற மக்களுக்கு எந்த விதமான பாதகமும் ஏற்படாது. அப்படிப்பட்ட ஐயம் இல்லாமல் இந்த மசோதாவை இந்த மன்றம் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

DEPUTY CHAIRMAN : The question is—

'That the Tamil Nadu HinduReligious and Charitable Endowments (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 45 of 1970), as passed by the Assembly, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

4-50 p.m. Clauses 2 to 6, clause 1, the Long Title and the Enacting Formula were put and carried.

THE HON. THIRU K. V. SUBBIAH: Sir, I move—

"That the Tamil Nadu HinduReligious and Charitable Endowments (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 45 of 1970), as passed by the Assembly, be passed."

DEPUTY CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 45 of 1970), as passed by the Assembly, be passed."

*திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, இந்த மசோதா சட்டம் ஆக்கப்படப் போகிறது. அதற்கு முன்பு அரசாங்கம் நான் சொன்ன வார்த்தைகளைக் கொஞ்சம் சிந்திக்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். என்டோமெண்ட் போர்டை உண்மையான போர்டாக ஆக்குங்கள். யாரையாவது அங்கத்தினர்களாக நியமித்து அந்த போர்டு சிபாரிசு செய்ய வேண்டும். அந்தச் சிபாரிசுகளை அரசாங்கம் நிறைவேற்றும்படியான நிலைமை ஏற்பட்டால், நமது மாநில அரசுக்கு நன்றாக இருக்கும். அரசாங்கத்திற்குப் பொறுப்புகள் ஏற்கெனவே நிறைய இருக்கின்றன. எனவே, இதையும் அவர்கள் தங்கள் மேல் போட்டுக் கொள்ளாமல் விட்டால் நல்லது. எனவே, இந்தப் பொறுப்பையும் மேற்கொள்ள வேண்டாம் என்ற இந்த வேண்டுகோளை விடுத்து முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இந்த மசோதாவைப் பொறுத்த அளவில், ஹெச். ஆர். சி. ஈ. போர்டு எப்படி அமைய வேண்டும் என்பதைப்பரிசீலிக்கவில்லை. அர்ச்சகர்கள் போன்ற வேலையை வகிக்கின்றவர்களுக்கு இது வரை ஹெரிடிடரி சிஸ்டம் இருந்து வந்தது. அது இருக்கக் கூடாது என்பது யோசனை. தலைமை நீதிமன்றத்தில் ''அந்த சிஸ்டம் கூடாது'' என்று ஜட்ஜ்மெண்ட் தந்திருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பை ஏற்றதால் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. அவ்வளவு தான். ஆகவே, ஏற்கெனவே இருக்கின்ற போர்டை மாற்றி நாங்கள் புதிதாக போர்டை அமைக்க வேண்டும் என்பதல்ல பிரச்னை. அது வேறு பிரச்னை. அர்ச்சகர்கள் போன்ற உத்யோகஸ்தர்களுக்கு வேலை கொடுப்பதற்குஒரு போர்டு வேண்டுமா, இல்லை வேண்டாமா என்பதைப்பற்றியெல்லாம் இந்த மசோதாவில் ஒன்றுமே சொல்லப்படவில்லை. சட்டம் இறுதியாக இருக்கிறது. அரசாங்கம் இப்போது இருக்கின்ற எந்த நிலைமையையும் மாற்ற விரும்பவில்லை. இந்த மசோதாவைப் பொறுத்த வரையில், ஹைகோர்ட்டில் கொடுக்கப்பட்ட தீர்ப்பின் பேரில் இது கொண்டுவரப் பட்டுள்ளது. வேறொன்றுமில்லை. எனவே இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தவத்திரு தெய்வசிகாமணி அருணுசல தேசிகர்—குன்றக்குடி அடிகளார்: இந்து மத அற நிலேயக் குழு அமைப்பது பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலேவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கடந்த 20 ஆண்டுக் காலமாக முன்பு இருந்த அரசும் இந்த மாதிரிச் சட்டங்களேச் செய்வதில் இந்து மத அறநிலேயக் குழுவைக் கலந்து ஆலோசிக்கவில்லே. இந்து மதத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் நான் கூட விரும்புவதென்னவென்ருல், இந்து மதத்தைச் சார்ந்த தலேவர்கள் அடங்கிய விஷயங்களே குழு பரிசிலனே செய்து பரிந்துரை செய்வது என்பது சரியான யோசனேயே. இப்போது உள்ள அரசாங்கம், அந்த மாதிரி செய்யத் தவறிவிட்டது என்று சொல்ல முடியாது. முன்பு இருந்த அரசாங்கமும் இதே மனப்போக்கில் தொடர்ந்து மூன்று சட்டங்கள் செய்திருக்கின்றன. இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் இந்து மதத் தலேவர்களேக் கலந்து செய்வது வரவேற்கத் தக்க ஆலோசனேயே. அந்த மாதிரியே செய்யும்படி கோருகிருேம். நான் கூற விரும்புவதெல்லாம் என்னவென்ருல், இந்தச் சட்டம் நடைமுறையில் கொண்டு வரப்படும்போது, இந்த மத சமய உணர்வுக்கு மதவாழ்வுக்கு எந்த வகையிலும் குந்தகம் ஏற்படாத வண்ணம் செயல்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. பல்லாயிரக் கணக்கான மக்களால் உணரப்படுகின்ற சாதி வேற்றுமை காரணமாக அவர்கள் ஒருவருக்கொருவர் உறவு உணர்வின்றி இருக்கின்ற நிலேயில் இப்போது கொண்டுவரப்பட்ட மசோதா வரவேற்கத் தக்கது. இந்த மசோதா இந்து மத சமய வரலாற்றிலேயே, தமிழக வரலாற்றிலேயே சிறப்பை ஏற்படுத்தும் என்று கூறி இந்த மசோதாவை வரவேற்று அமருகிறேன்.

திரு. கே. அறிவழகன்: துணேத் தலேவர் அவர்களே, இந்து ரிலிஜியஸ் எண்டோமெண்ட் சார்பில் இந்தச் சிறிய தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கோவில்களில் வேலே செய்கின்ற குருக்கள் போன்ற பதவிகளுக்கு ஜாதி அடிப்படையில் முறை இருக்கக்கூடாது என்ற எண்ணம் நீண்ட காலமாகவே இருந்து வந்திருக்கிறது, சமுதாயம் விரும்பி வந்திருக்கிறது. ஜாதி பேதமற்ற சமுதாயத்தின் அடிப்படையில் மாற்றங்கள் எங்கும் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற அந்த அடிப்படையில் கோயில்களின் அர்ச்சகர்கள் போன்ற வேலேகளுக்கு எல்லோருக்கும் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மசோதா வரவேற்கத் தக்கது. இந்தச் சமயத்தில் நான் இன்னென்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அர்ச்சகர்களேப் போலவே, கோயில்களில் தெய்வத்தின் முன்னுல் செய்யப்படுகின்ற காரியங்களுக்கு மாத்திரம் தான் இந்த நிலே என்பதோடு அல்லாமல், கோயில்களில் செய்யப்படுகின்ற மற்ற வேலேயாகிய சமைத்துப் போடுகின்ற வேலேக்கும் ஒரு குறிப்பிட்ட ஜாதியினர் என்ற நிலேமையையும் மாற்றியாக வேண்டும். இந்த என்னுடைய எண்ணத்தையும் கூறி, இந்த மசோதாவை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின் நோக்கம் அரசின் துறைகளிலே வேலை பார்க்கின்றவர்கள் எப்படி வர வேண்டும் என்ற முறையில், ஜாதி வித்தியாசம் இல்லாமல் அவர்களுக்குச் சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட வேண்டும் என்பதற்கானதாகும். இந்துமதக் கோயில்களிலே பணியாற்றுகிறவர்களில் பல்வேறுதரத் தவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் இன்னார்தான், இந்தப் பரம் பரையைச் சேர்ந்தவர்கள் தான் வர வேண்டும் என்ற முறையை நீக்கிச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. கிராம அதிகாரிகள் நியமன விஷயத்தில் பரம்பரை பாத்யதை இருந்தது. அதைச் சட்டம் செய்து எடுத்தாகிவிட்டது. எனவே, இந்தப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் தான் இந்த வேலையைச் செய்ய வேண்டும் என்பது இருக்கக் கூடாது. நியாயமும் இல்லை என்ற வாதத்தை ஒப்புக்கொள்ள முடியும். இந்தப் பணியை எவரும் செய்யலாம் என்று ஏற்படும்போதுதான், அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். விஞ்ஞானம் நாட்டில் பெருகியிருக்கிறது. விஞ்ஞானம் வளருவதற்கு, மெய்ஞ்ஞானம் பற்றிக் கூறுகிறவர்களின் யோசனைகளையும் சிந்திக்க வேண்டியிருக்கிறது. எனவே, மெய்ஞ்ஞானம் வளருவதற்கும் வழிவகைகள் செய்யப்பட வேண்டும். இதைப்பற்றி விளக்கமாக எத்தனையோ பேசலாம். இன்றைய தினம் விஞ்ஞானம் வியக்கத்தக்க அளவுக்கு வளர்ந்திருக்கின்றது. இந்த அளவில் மெய் ஞான வளர்ச்சிக்கு நாம் செய்ய வேண்டியவை எத்தனையோ இருக் கின்றன. இதைப்பற்றியெல்லாம் யோசிக்க வேண்டும். அந்தத் துறை யில் கூட நாம் முன்னேற வேண்டும். எந்தெந்த வகைகளில் பணி புரிந்து அவற்றை முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும் என்பதைப் பார்க்க வேண்டும். அதே சமயம், மெய்ஞ்ஞானம் வளருவதற்கும் வழி வகைகள் செய்ய வேண்டும். அந்த வகையில் மெய்ஞ்ஞானம் அடைய வழி வகைகள் இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டியிருக் கிறது. அவை இருப்பதாலேயேதான்.

திரு. கே. அறிவழகன் : இந்த மெய்ஞ்ஞானம், விஞ்ஞானம் பற்றிய அறிவு கோயிலில் இருக்கிற குருக்கள் பெற வேண்டுமென்பதை விதியாக விதிக்க வேண்டுமென்று அங்கத்தினர் அவர்கள் விரும்புகிறார்களா ?

5-00 p.m.

*திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : அங்கத்தினர் அவர்கள் அவசரப் படுகிறார்கள். அவர்களுக்கும் அந்தத் தகுதி இருக்க வேண்டுமென்று ஒப்புக்கொள்கிறேன். அந்தப் பணியைச் செய்ய வருகிறவர்கள் எத்த கையவர்களாக இருக்க வேண்டும், எதைப் பயில வேண்டும், அவர்கள் வாழ்க்கையில் எதை அனுஷ்டிக்க வேண்டும், இப்போது இருக்கிறவர் கள் அனுஷ்டிக்கிறார்களா என்பதையெல்லாம் பார்க்க வேண்டுமே தவிர, இந்த ஏச்சு பேச்சு கேள்வியெல்லாம் வேண்டாம். நல்ல முறையில் கோயில்கள் நடைபெற வேண்டும். அப்படி இதை எதிர் காலத்தில் விரும்பி வருகிறவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். எல்லா வகுப்பினரும் தகுதியுடையவர்களாக வந்தால், தகுதி பெறு வார்கள் என்ற பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்கிறது. அதில்தான் நாம் கவனமாக இருக்க வேண்டும். ஆசிரியர்கள் பயிற்சி இருக்கிறது.

2nd December 1970]

டெபுடி சேர்மன் : சுருக்கமாக முடித்தால் நல்லது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : ஆசிரியராக வருகிறவர்கள் எப்படி இருக்க வேண்டுமென்பதற்கு நன்னூலில் சூத்திரம் இருக்கிறது. அதைப் போல இந்தத் தகுதியை, சில வரிகள் படித்ததனுல், சில வற்றை ஒப்புவித்ததனுல் பெறலாமென்று இருந்துவிடக் கூடாது. சங்கீதத்திற்கு சர்வகலாசாலே மாதிரி மாநில அளவில் வைத்திருக் கிறோம். இந்த சங்கீத சர்வகலாசாலேயில் படிப்பவர்கள் யாரேனும் வெளியே புகழ் பெற்றவர்களாக இருக்கிருர்களா என்ருல், இல்லே. சங்கீதம் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்களாகத்தான் பணி புரிகிருர்க களே தவிர, பெரிய கச்சேரி நடத்தும் தகுதி இன்னும் வரவில்லே. இதைச் சொல்வதால் இந்தத் திட்டத்தை எதிர்ப்பதாக நினேக்க வேண்டாம். இந்தப் பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்கிறபோது, தெய்வீகப் பணியை ஏற்றுக் கொள்வதற்கு வேண்டியவர்களே அரசு தயாரிக்கும்போது இந்தக் தகவலும் உணர்ச்சியும் நம் மனதில் வர வேண்டும். அதற்குத் தகுந்தவர்களாகத் தயார் செய்து, அதை ஏற்க வும் தயாராக இருக்கவேண்டும்.

*திரு. ஏ. பி. ஜனுர்த்தனம் : துணைத் தலேவர் அவர்களே, பெரியார் அவர்கள், அறிஞர் அண்ணு அவர்கள் நினேத்திருந்த, நினேக்கிற அளவில் இது முதற்படிதான். கண்ணப்ப நாயனுரை விரும்புகிறவர்கள், நந்தனுரை விரும்புகிறவர்கள் நிச்சயமாக இதை ஏற்றுக்கொண்டுதான் தீருவார்கள். 1970-ல் அத்தனே பேரும் சமம், பிறப்பில் உயர்வு தாழ்வு கூடாது என்ற கருத்தைப் பிரதிபலிக்கிற இந்த ஒரு மசோதாவை உளமாற நான் வரவேற்கிறேன்.

திரு. பி. நாராயணசாமி : துணைத் தலேவர் அவர்களே, இந்த மசோதாவைப் பற்றிய விளக்கங்களே எதிர்க் கட்சித் தலேவர் அவர்களும், நாயுடு அவர்களும் சொல்கிறபோது, நம்முடைய இந்து சமுதாயத்திற்கே ஒரு பெரிய ஆபத்து வந்துவிட்டது போன்ற நிலேயில் சொன்னுர்கள். எதிர்க் கட்சித் தலேவர் அவர்கள் பேசும்போது, முஸ்லீம் மதத்திற்கோ, கிறிஸ்தவ மதத்திற்கோ இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதற்கு இந்த சர்க்காருக்கு தைரியம் இருக் கிறதா என்று கேட்டுவிட்டு, இந்து மதத்திற்கு மட்டும் இப்படிப்பட்ட ஒரு திருத்தம் கொண்டுவருகிற நிலேமை ஏற்படுகிறதே என்ற ஐயப் பாடு மக்களுக்கு எழுகிற வகையில் வாதத்தை வெளியிட்டார்கள். பொதுவாக அவர்களேக் கேட்டுக்கொள்கிறேன் : முஸ்லீம் மதத்தைப் பொறுத்த வரையில், அவர்கள் வழிபடும் இடங்களில் ஒரு பூசாரிதான் இருப்பார். அவர் முஸ்லீமாகத்தான் இருப்பார். அப்படி முஸ்லீம் மதத்தில் உள்ளவர்கள் எல்லாம் முஸ்லீம் ஆனவர்கள். கிறுஸ்துவர் களிலும் ஜாதி வித்தியாசமில்லே. பத்து ஆண்டுகளுக்கு முன் எனக்குத் தெரிந்தவர் ஒருவர் கிருஸ்தவ மதத்தில் சேர்ந்தார். இப்போது பிஷப்பாக, மத குருவாக அவர் ஆகிவிட்டார். நான் இந்து மதத்தில் இருப்பதால், அப்படி ஆக முடியுமா ? இந்தக் கேள்விக்குத் தான் இப்போதுபதில்கிடைத்திருக்கிறது. இந்துவாக இருந்து கிறிஸ்தவ

ராகவோ, முஸ்லீமாகவோ மாறியிருக்கிறுர்கள். ஆனுல் ஒரு முஸ்லீமோ கிறிஸ்தவரோ இந்து ஆனதாகத் தெரியவில்லை. ஆகையால் தயவு செய்து எதிர்க் கட்சித் தலைவர் அவர்களையும் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். இந்து மதத்தில் எல்லோரும் வந்து சேருகிற அளவில் வாய்ப்பைத் தந்து நல்ல முறையில் பயன் அளிப்பதற்கு இந்தச் சட்டம் சரியான முறையில் பயன் தரும் என்று கருதி இந்தச் சட்டத்தை ஆதரிக்கிறேன்.

DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 45 of 1970), as passed by the Assembly, be passed."

The motion was put and carried and the Bill was passed.

(2) *The Tamil Nadu (Occupants of Kudiyiruppu protection from Eviction) Amenment Bill, 1970 (L. A. Bill No. 43 of 1970)*

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

"That the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill,* 1970 (L.A. Bill No. 43 of 1970), as passed by the Assembly, be taken into consideration."

Under section 1 (3) of the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Act, 1961, that Act would remain in force for a period of 9 years from the date of its commencement, *i.e*, up to 29th November 1970.

The Act gives protection from evictionfor persons occupying Kudiyiruppu. Pending enactment of a comprehensive tenancy legislation, it is considered that the life of the Act should be extended for a further period of three years. The Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Ordinance, 1970 was promulgated by the Governor for extending the life of the Act for a further period of three years from 29th November, 1970.

The present Bill seeks to replace the said Ordinance.

Sir, I request the House to accept the motion.

DEPUTY CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1970 (L.A. Bill No. 43 of 1970), as passed by the Assembly, be taken into consideration."

---

*Printed as Appendix IV.